# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 87/2017 ராமதாஸ் (பிசா1) தேதி:29.01.2025**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

ராமசுப்புவின் பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை அவர் தனித்து அனுபவம் செய்த ஆவணத்தை காட்டும் ஆவணங்கள் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராமசுப்புவின் பாகத்திற்கு கிடைத்தாக நான் குறிப்பிடும் 10 ஏக்கர் 50 சென்ட் நிலத்திற்கு ராமசுப்புவின் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் 10 ஏக்கர் 50 சென்ட் மற்றும் தாவாசொத்துக்கள் ராமசுப்புவின் தந்தை குருசாமிநாயக்கர் பெயரில் பட்டா உள்ளது என்றால் குருசாமிநாயக்கர் மற்றும் சங்கரப்பநாயக்கர் பெயரில் பட்டா உள்ளது. அவ்வாறு சங்கரப்பநாயக்கர் பெயரும் பட்டாவில் கூட்டாக உள்ளது என்தற்கு ஏதாவது ஆவணம் பார்த்துள்ளேனா? என்றால் பார்த்துள்ளேன். நான்சொல்வதுபோல் குருசாமிநாயக்கரின் 3 ஆண்மக்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துகொண்டார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் யாவும் குருசாமிநாயக்கர் இறப்பிற்கு பின் அவரது 4 பெண்வாரீசுகள் மற்றும் 3 ஆண் வாரீசுகள் கூட்டாக அனுபவம்செய்து வந்து அதில் பெண்வாரீசு சீனியம்மாள் இறந்தபின்னர் அவரது வாரீசுகளும் ஆண் வாரீசு ராமசுப்பு இறந்தவுடன் அவரது வாரீசுகளும் கூட்டாக அனுபவம்செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 பதிவுசெய்யப்படாத கிரையம் ஒப்பந்தம் என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ன்படி எனது தந்தை 7 ம்பிரதிவாதி முத்து என்பவர் ராமசப்புவிடம் ரூ.32,000/– முன் அட்வான்ஸ் தொகையாக கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபணவாக்குமூலம் பாரா10 ல் 10 ஏக்கர் 50 சென்ட் நிலம் மொத்தமாக கடந்த 2002 ம் வருடம் மொத்த ரூ.52,000/–என கிரையம் பேசி மேற்படி தொகையை எனது தாயார் மாரியம்மாளிடம் ராமசுப்பு 2 தவணைகளில் பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விவரமானது பி.சா.ஆ 6 கிரையஒப்பந்தத்திற்கு எதிரானது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 ஒப்பந்தம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது

தந்தை என்னிடம் பி.சா.ஆ.6 பற்றி கூறினார். எனது தாயார் ராமசுப்புவிடம் 2 தவணைகளில் ரூபாய் கொடுத்தாக நான் குறிப்பிட்டுள்ளநிலையில் அதுசம்பந்தமாக ரசீது ஏதாவது வாங்கப்பட்டதா என்றால் இல்லை. எனது தாயாரிடம் ராமசுப்பு 2 தவணைகளில் ரூபாய் 52,000/−வாங்கிய விவரம் பி.சா.ஆ.6 கிரையஒப்பந்தஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஒப்பந்தம் 4.2.2002 தேதியில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் மீதகிரையத்தொகையை 6 மாதத்திற்குள் ராமசுப்பு பெற்றுக்கொண்டு கிரையம் பதிந்துகொடுக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி எனது தந்தை அந்த 6 மாத காலத்திற்குள் அந்த சொத்தை கிரையம்பெற முயற்சி ஏதாவது செய்தாரா என்றால் எனது தந்தை அந்தசமயத்தில் வெளிநாட்டில் வசித்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. பி.சா.ஆ.6 ல் பின்புறம் 2.2.2008 ல் தேதியில் ரூ.52,000/−ராமசுப்புபெற்றுக்கொண்டதாகவும், கிரையம்செய்து தர ஆட்சேபணை இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமசுப்பு 2014 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4.2.2002 தேதிமுதல் ராமசுப்பு இறக்கும் 2014 ம்வருடம் வரை அந்த கிரையஒப்பந்தத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால்சரியல்ல. பி.சா.ஆ.6 ல் பின்புறம் உள்ள விவரங்கள் யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் ராமசுப்பு என்பவரால் எழுதப்பட்டது. ராமசுப்புவால் அந்த விவரம் எழுதப்பட்டதாக அதில் குறிப்பு உள்ளதா? என்றால் அவரே எழுதிதான் அதில் கையெழுத்து செய்துள்ளார். ராமசுப்பு அந்த விவரங்களை எழுதியதாக நான் கூறுவது பி.சா.ஆ.6 ல் துலங்காது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைதொடர்ச்சி:** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd)D.மாரிக்காளை,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.